பதிவு எண்—M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

5-கிளை குருகுலம், மாம்பாக்கம்; விசய, ஆனி, 26- 6- 53 தளிர்-39

20 JUL 1953

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

வானோர் விருந்து

பிறருக்கு நாம் விருந்தோம்பினால் மற்றவரும் நம்மை விருந்தினராய்ப் போற்றுவர். மண்ணுலக மக்கள் விருந்தினரைப் போற்றுதலால் வானுலகத்தேவர் இவரை விருந்தினராய்க் கொள்வர். நாம பிறருக்கு உதவி செய்தால் பிறரும் நமக்கு உதவி செய்ய விரும்புதல் இயல்பேயாம். ஒன்றுக்குப் பன்மடங்காக உதவிகள் கிடைத்தலும் வாய்வதேயாம். அதுபோலவே இவ்வுலகத்தில் விருந்தோம்புர் புண்ணிய முடையோர் வானோரினும் மேம்பட்ட தவச் சிறப்பாளராய் உயர்ந்து, அவ் வானுலகு போற்றும் பெருமையைப் பெறுவதும் அமைவதேயாம்.

நற் செயல்கள் செய்வதில் நல்லவர்களுக்கு மேல்மேலும் ஊக்கம உண்டாகும். பல முறை செய்வதனாலும் மகிழ்வடைவர். மேல் மேலும் ஆக்கமும் நன்மையும் விளையக்கூடிய செயலைத் திரும்பத் திரும்ப எத்தனை தரம் செய்தாலும் ஆக்கந்தானே! அதனால் அது மகிழத்தகுந்ததேயன்றி வருந்தத் தகுவதன்று. ஒரே நாளில் பலமுறை விருந்தோம்புவதற்கு எவ்வளவோ நல் உள்ளம் வேண்டும்; உண்டு மகிழும் இன் முகத்தைக் காணும் பெருந்தன்மையும் வேண்டும். அதில் எவ்வளவோ செலவுகளும் உழைப்புகளும் இருந்தாலும் அவையெல்லாம் மேல்மேல் மகிழ்வுக்கே ஊற்றாகும். தம்மைத் தகுதிப்படுத்துவதற்கே மருந்தாகும்.

மண்ணுலகமே அன்றி விண்ணுலகமும் போற்றும் அரிய தொண்டு ஒன்று உண்டென்றால், வாழ்நாளை விருந்தோம்புதலாகிய ஒரே நோக்கத்திற்கு ஒப்படைத்து விடுதலேயாம்.

விருந்தினரில் சிலர், தம்மை நோக்கித் தம் இல்லத்திற்கு வாராமல், விருப்பமுடையோர் போற்றட்டும் என்னும் கருத்தோடு தம் போக்கில் செல்லும் செல்விருந்தினராயும் இருப்பர். அத்தகைய விருந்தினர் பற்றற்ற ஞானியராதலின், அவரை முதலில் ஓம்புதல் இல்வாழ்வோர் கடமை! தம்மைக் குறித்து வரும் ஏனைய விருந்தினரையும் அவர் எதிர்பார்த்திருந்து உதவுதல் செய்வர்; இங்ஙனமெல்லாம் விருந்தோம்பும் சிறப்பு இந் நாட்டின் பழம் பெரும் சிறப்பு!

செல்விருந்து ஓம்பி, வருவிருந்து
பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

செல விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்—தன்னிடம் வந்து செல்லும் விருந்தினரைப் போற்றி, அடுத்துத் தன்னை நோக்கி வரும் விருந்தினரை அவ்வாறே போற்றும் பொருட்டு எதிர்பார்த்திருப்பவர், நல் விருந்து வானத்தவர்க்கு—வானோர்க்குத் தக்க விருந்தினராய்த் திகழ்வர்.

விருந்தோம்புதலே நோக்கமாய் இருப்பாரது செயல் இத்தகையது என்றபடி. செல் விருந்து வருவிருந்து என்பன வினைத் தொகைகள். விருந்தினரை 'விருந்து' என்றார்.

இவ்வாறு விருந்தோம்புவார் தன்னலம் ஏதும் இன்றிப் பிறர்க்கென்றே வாழும் சிறப்பினராதலின் அவர் ஞான நலம் அமைந்தோராய் வானோர்க்கும் நல் விருந்தாகின்றனர். நல் விருந்து—தவ ஞான ஒழுக்க முடைய விருந்தினர்! வானோர்க்கும் அவர் மேம்பட்டவராதலின், அவருக்கு நல்விருந்தாயினர். கிடைக்கப் பெறாத விருந்து என்றற்கு 'நல் விருந்து' என்னும் [illegible] ஆம்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
5-ம் ஆண்டுக் கையொப்பம்
(3-10-52 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்— கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

இலை	விசய, ஆனி,	களிர்
5	26-6-53 வெள்ளி	39

உலகின் இதயம்

மக்கள் அனைவர் உள்ளத்தினின்று எழும் எண்ணங்களிலெல்லாம் ஒரே நோக்கம்—சமரச நோக்கம்— 'எவ்வெக் கோணங்களிலெல்லாம் தத்தம் எண்ணத்தைச் செலுத்துகிறார்களோ, அவ்வவற்றிலெல்லாம் அந்த ஒரே கருத்துப் புலனாக வேண்டும்' என்று அவர்கள் உணரும் அவ்வுணர்வே உலகின் இதயம்.

ஏழைகட்கும், இதமறியாச் செல்வர்கட்கும் உள்ள வேற்றுமைகள் எத்தனையோ அவைகளத்தனையினும் ஊறிக் கிடக்கும் உளுத்துப்போன கருத்தை, இழுக்கைத்தரும் செயலை, அடியோடு கிள்ளி யெறிந்து, நேர்மையின் அடிப்படையிலே, ஒருவர்க்குப் பேதமற்ற சமுதாயத்தை அமைக்க எண்ணும், அவ விலை மதிக்க வொண்ணா உயரிய கருத்தே உலகின் இதயம்.

'ஒழுக்கம்' என்பது போன்றே இதயம் என்பதும், எண்ணுவதிலும், இயம்புவதிலும், இயற்றுவதிலும்; ஒழுக்கம் எவ்வளவு அவசியமோ, அங்ஙனமே உள்ளத்தினின்றெழும் அத்தனைக் கருத்துக்களிலும் தூய்மை வேண்டும். அத் தூய்மையே உலகின் இதயம்.

மனிதனின் அடிப்படை உரிமைகளில் அணுவளவும் வேற்றுமை காட்டாது, எல்லோரும் ஓர் தாயின் சேய்களென உணர்ந்து எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதே யல்லாமல் வேறொன்றறியாத உயரிய மனப்பான்மை கொண்டு, ஜீவாதார உரிமை பெற்று வாழ்க்கை பூரணத்வம் பெற வேண்டும் என்று எண்ணும் நெஞ்சமே உலகின் இதயம்

இன்பச் சோலையிலே பல்வித இனிப்புக் கனி கனிந்து வர்ணம் பலவாகி வடிவு பலவாகிக் கண்டோர் கண் பறிக்கும் எழில் மிடைந்து நிற்கும் அத்தனைக் கனிகளுள் 'இனிப்பு' என்னும் சுவை அவைகளை இணைத்தல் போல, அவ்வவ்விடத்தின் இயற்கை நிலைக் கேற்பத் திரிந்து படும் மனித வாழ்வில் 'நாம் எல்லோரும் மக்கள்' என்ற சமத்துவ எண்ணம் பீரிட்டுக் கிளம்ப வேண்டும். அவ்வுணர்வு தான் உலகின் இதயம்.

புழுவாய் நெளிந்து மனிதத் தன்மைக்குப் புறம்பான ஏதுக்களால் தாக்கப்பட்டுத் துடியாத் துடிக்கும்—துவளும்—வாழ்வில் இன்பமற்ற முடவனை ஏழையின் கண்ணீரைக் கண்டு மனமிரங்காத உள்ளுறுதி பெற்றவர்களின் சிந்தையை நெகிழ வைத்து, அவற்றில் ஈவிரக்கமென்னும் இன்பப் பொழிலை உண்டாக்கி, எல்லோரும் ஓரினம் என்ற சகோதரத்துவத்தை அவர்கள் நெஞ்சிலே நிறுத்தி, அதனின்றெழும் மனித அபிமானக் குரலே இன்ப நாதமே இனிய கீதமே, உலகின் இதயம்.

அமெரிக்காவிலே புரட்சி, ஆப்பிரிக்காவிலே கிளர்ச்சி, ஆசியாவிலே அதிர்ச்சி என்றெழும் அத்தனைப் போராட்டங்களிலும், சமரசம் சாத்வீகம் அமைதி என்று இடத்துக்கேற்பத் திரியும் ஒரே கொள்கையை வலியுறுத்தி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், ஆகிய மூன்றுமடங்கிய மனித உரிமைச்சாதனத்தை உறுதிப்படுத்தி, அதனின்று அன்பு, அறம், இன்பம் நிலவும் மேன்மை வாழ்க்கையை வகுத்துக் கொள்ளச் செய்து, உயிர் வாழ்க்கையின் அடிப்படைத் தேவையான உணவு, உடை, உறையுள் என்பதில் தேவைக்கேற்ப உழைப்பை நல்கிப் பெற்று உயரிய மனித வாழ்க்கையை அமைத்துக் கொள்ள உதவி புரியும் ஒரு இங்கிதமான அமைப்பே, (அரசாங்கம்) உலகின் இதயம்.

—நாராயணசாமி

அருள் துறை

* நெஞ்சு விடு தூது *

(முத்துசாமி)

குதிரை:

“தோலாத...வாசியான்”

வெற்றியுடைய வானம், உலகம், மலை, கடல், ஏழு கீழ் உலகங்கள், உடம்புக்கு மூலமாக இருக்கும் ஐம்பூதங்கள், அவற்றை இயக்கும் மூச்சு, மூச்சால் வளரும் உள்ளுணர்ச்சி, ஞானம் இவைகள் ஒவ்வொன்றும் எல்லாமாயும், இவைகள் அனைத்தும் எண்ணுகிறவர்கள் எண்ணத்தில் கட்டுண்டு நிற்காமல் நிற்கிற, நீளப்போகின்ற குதிரையுடையவன்.

இனி, அடுத்து இறைவனுடைய குதிரையைப் பற்றிக் கூறுகிறார். வாசி—குதிரை. ஈண்டு வாசியென்று குறிப்பிட்டது மூச்சை. குதிரை போன்று நில்லாமல் வேகயாகப் போகும் இயல்பு மூச்சுக்கு உண்டு. குதிரையைப் பிடித்து இழுத்து நிறுத்தினாலும், சற்றே நின்று நின்று விட்டு மறுபடியும் வேகமாக இயங்கத் தொடங்கிவிடும். இக் காரணங்களால் மூச்சைக் குதிரை யென்பர். ஆகவே ஈண்டு மூச்சு வாசி யெனப்பட்டது. சுவாசி யென்றால் நல்ல வண்ணமாக மூச்சு விடு என்று பொருள்.

மூச்சினால் பொருள்களின் தன்மைகளை வாங்கலாம். அதற்கு முறைப்படி கருத்தோடும் ஆழ்ந்த பாவனையோடும் உரிய மந்திர தியானத்தோடும் இழுக்க வேண்டும். அங்ஙனம் சுவாசிக்கும் பழக்கமுடையவர் ஈண்டுக் கூறப்பட்ட வானம் முதலிய பொருள்களில் யாங்கு தற்குரிய தன்மைகளை வாங்குவர். அங்ஙனம் வாங்கி உடலைச் செப்பமாகவும் சக்தி மயமாகவும் வைத்துக் கொண்டால் ஞானமும் பெறலாம். உள்ளுணர்ச்சிகள் சிறந்து ஞானம் பெறவும் மூச்சு பயன்படும். இவ்வாறு மூச்சு இழுத்து நிறுத்திவிட வல்லவர்கள் எண்ணத்தில் இறைவன் நில்லாமல் நிற்பன் என்று கூறுகிறார் நில்லாமல் நிற்றலாவது அவர்கள் எண்ண அளவாய் வரம்பாய்க் கட்டுண்டு நில்லாமல் அதாவது தன் வரம்பற்ற தன்மைக்குக் குறைவுபடாமல் நிற்கும் இயல்பு.

யானை:

“சொல் அரும்...ஆனையான்”

சொல் நிறைந்த பாதலங்கள் ஊடுருவிச் சென்று, பார் ஏழுக்கும் விண் ஏழுக்கும் ஆதாரமாகி, அகண்டமாக அதாவது விசாலமாக எங்கும் நிறைந்து, சொல்லுதற்கு அரியதாய், சொல்ல முடிந்த வரையில் சொல்ல எளிகாய், அருமையான வேதத்து ஆறங்க உருவாய், உயிராய், உணர்வாய்ப், பெரிதான கொடுமையான துயரம் தரும் பாசத்தை முழுதும் அற்றுப் போக வீசி எறிந்து, கொடுமையான பிறவியெனும் நல்ல கடலைத் துகளாகும்படி அழித்து ஐயமுறச் செய்வனவற்றையும், காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாத்சரியம் ஆகிய குற்றங்களையும் கோபித்து அழித்து, சாமன் தொழிலை அடியோடு அழித்து, வெவ்வேறு பெயர்கள் வைத்துக் கொண்டு கத்தி வாதமிடும் சமயக்கணக்கர்களின் வலிவைக் கட்டறுத்து, அவரவர் கொலை பயம் முதலியவைகளையும் அழித்து, பொருட் பெண்டிர் ஆசைக் கருத்தை முழுவதும் வீசி எறிந்து, அன்பால் முடிந்த வேகங் கொண்டு அருளாகிய மும்மதத்தினால் ஊனோடு பொருந்திய தத்துவங்களும் புகுந்து அவைகளிலுள்ள நல்லவைகளைக் கொண்டு களிப்புக் கொண்டு உயர்ந்து மறைகளாகிய நான்கு கொம்புகளோடு பொருந்தித் திகழ்கின்ற ஞானம் என்னும் ஆனையையுடையவன்.

குதிரைக்கு அடுத்து யானை கூறப்படுகிறது. ஒரு தலைவனுக்குக் குதிரை யானை யென்ற இரண்டும் உண்டு. பட்டத்துக் குதிரை யென்றும் பட்டத்து யானை யென்றும் பெயரிட்டு வழங்குவர். சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி தலைவன் ஏதேனும் ஒன்றில் ஏறி வருவன்.

ஈண்டும் எங்கும் நிறைந்த உருவமில்லாத இறைவனுக்குக் குதிரை யானை என்று எல்

வெதனைக் குறிப்பிடுவது? எதன் மூலமாக அவனை எட்டி அறிய முடியுமோ அதனையே சொல்ல வேண்டும். மூச்சால் ஞானம் நிறைவடையப் பெறலாம் என்றோம். ஆகவே மூச்சு அவனுக்கு ஒரு வாகனமாகக் குறிப்பிட்டார். அங்ஙனம் பெற்ற ஞானத்தையே ஆனையாக ஈண்டுக் கூறினர்.

இறைவன் அருள் அல்லது ஞானவெளியில் உள்ளவன். ஞானம் நம்மிடம் நிறைந்தால் அங்கே இறைவன் இருப்பன் அதாவது ஞானத்தினுள் இறைவன் உளன், அதாவது ஞான ஆனையின்மேல் இறைவன் உளன் என்க.

ஒரு யானை என்ன வேலைகளைச் செய்யுமோ அதுபோல் ஞானமும் வேலை செய்யும். யானை போகும்போது சிலவற்றை அடித்து வீசி எறிந்து கொண்டும் சிலவற்றை எடுத்துக் கொண்டும் செல்லும். இங்கே ஞானம் நல்லனவற்றைத் தழுவிக் கொண்டும் கெட்டவற்றை அடித்து வீசி எறிந்து கொண்டும் செல்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஞானவெளி, எங்கும் நிறைந்தது. அவ்வெளி இல்லாத இடம் இல்லை. அதனால் அகண்டம் நிறைந்தது என்றார். அதன் பெருமை முழுதும் பேச அரிது. ஆனால் ஓர் அளவு எளிதாய்ப் பேசவும் முடியும். ஆகவே 'ஓத அரிதாய்' என்றார்.

ஞானம் பாசங்களை அகற்றும்; பிறவியை அறுக்கும். காமம் முதலிய அறுவகைக் கெட்ட குணங்களைப் போக்கும். காமம் உண்டாகக் காரணமான சாமத்தன்மையையும் நீக்கும். காமம் என்பது ஒரு பொருளின் மீது எழும் அவா. சாமம் என்பது அவ்வவா எழுதற்குக் காரணமான அப்பொருளின் தன்மை; இரண்டும் ஞானத்தால் நீங்கும் என்று ஈண்டுக் குறிப்பிட்டார்.

சாமம் என்பது திரோதான சக்தியன்று. திரோதான சக்தியென்றது இறைவன் சக்தியின் ஒரு கூறு. அது பொருளில் கலக்கும்போது அப்பொருளின் தன்மை அதாவது சாமத் தன்மை அழகு பெற்று மிகும். ஆகவே ஆவலாய் அப்பொருளின் மீது கவரப்படுவோம். கவரப்பட்டாலும் பின்னர் அம்மையின் செயலாலல்லவோ இங்ஙனம் அழகு பெற்றுக் காண்பது என்று தெளிவு பிறக்கும். ஆகவே காமமும் சாமமும் தீயவை யென்றே ஒதுக்கத் தக்கன அல்ல; நுகர்ந்து அறிவு பெற்று மேலுக்கு உயர்த்துவனவே. பெறவேண்டிய உணர்வு பெற்ற பின்னரும் ஆசையாய் அழுந்தி நிற்றல்தான் கடியப்படும். அங்ஙனம் ஆசையாயிருக்க ஒட்டாது தடுத்து நம்மை ஞானம் அல்லது அருள் உயர்த்தும்.

அறுசமய வாதிகள் தம் தம் கொள்கைகளையே உண்மை என்று வாதிட்டுக்கொண்டிருப்பவர். ஒரு யானையை ஆறு குருடர்கள் தடவிப் பார்த்துவிட்டுத் தாம் தாம் பார்த்த பாகத்தின் தன்மையைக் கூறி யானை இப்படிப்பட்டது என்று வாதிட்டது போலவே அறுசமய வாதிகளின் செயல் எனலாம். கண்ணுடைய ஒருவன் அவ்வறுவரையும் அழைத்து நீங்கள் அவ்வளவு பேரும் கூறுவன உண்மையே, ஆனால் தனித்துச் சொல்லாமல் நீங்கள் கூறியவை யனைத்தையும் சேர்த்து அவற்றோடு நீங்கள் தடவிப் பார்க்காத முதுகு தலை முதலிய பாகங்களையும் சேர்த்துச் செல்ல வேண்டும் என்று சொல்வானன்றோ! அதுபோல அகண்ட ஞானப் பார்வையுடையவன் இறைவன் தன்மை அறுசமய வாதிகள் கூறுவனவும் இன்னும் பிறவும் சேர்ந்ததாகக் கொள்ளவேண்டுமென்பவன்.

அருள் மும்மதம் என்றது அன்மைகள் மன்மைகள் கன்மைகள் தன்மைகளை.

நல்ல உயர்ந்த யானைக்கு நான்கு கொம்புகள் இருக்கும். அவற்றை ஈண்டு நான்மறைகளெனக் கூறினர். ஞானம் வேதத்தால் விளங்கித் திகழ்வது; ஆகவே நாற்கோட்டு யானை இறைவனுக்குக் கூறினர்.

நஞ்சன்கூடு பல்பொடி

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்வர்ன்,

54; பந்தர்த் தெரு, :: சென்னை 1

விநாயகர்

(சோமசுந்தரம்)

(முன் தொடர்ச்சி)

அறிவால் ஆராய்ந்து, உறுதிப்பட்டு நினைக்க, பெரும்பாலும் நாம் இயற்கைப் போக்கில் போவோம். தவறிப் போவது செயற்கை. கனிந்த பாவனையில் கலந்து உறவாடுதலினால் தான் ஒன்றைச் சேர்த்துப் பார்க்கிற நிலை வரும், கையின் மேல் பாகம் சேர்ந்தும் கீழ்ப்பாகம் பிரிந்தும் இருக்கிறது. சேர்ந்த இருக்கிறவலிவின் காரணத்தால பிரிந்து பயன்படுகிறது. ஆகவே சேர்த்துப் பார்க்கும் அன்புத் துறை ஒன்றே பாவனையை முதரவைத்து ஆற்றலைக் கொடுக்கும்.

மனத்தால் நினைக்கலாம். அழுத்தமாக நினைத்தால் நினைவு எண்ணமாக உருக்கொள்கிறது. ஆகவே நினைத்தல் வேறு, முனைத்தல் வேறு, எண்ணுதல் வேறு, அழுந்திய நினைவின் வடிவம் எண்ணம். அன்பு இருந்தால்தான் அழுந்தி நினைக்க முடியும். இம்மாதிரி அழுந்தி நினைக்க எண்ணியது எண்ணியபடி நிறைவேறும். அன்பு சேராவிடில் 'எண்ணிய எண்ணியாங்கு எய்துப' என்ற நிலையிலிருந்து வேறாகிவிடுவோம். அவ்வளவு எண்ண அழுத்தத்தால் வேலை செய்யவேண்டும். கை, கால், முதலிய உறுப்புக்கள் இருந்தாலும், மனத்தால், அறிவால், முனைப்பால், எண்ணத்தால் வேலை செய்யக் கூடிய உயர்ந்த பிறவி மனிதப் பிறவி; கைகால்களால் வேலை செய்வது பிராணி நிலை. பிராணி நிலையிலிருந்து மனித நிலைக்கு உயர வேண்டுமாதலின் எண்ணத்தால் வேலை செய்யவேண்டும். இவ்வளவு தூரம் பேசியது இயற்கையை எண்ணிப் பார்ப்போம் என்பதற்காகவே.

நம் எதிரில் இருப்பது உலகம்; இது காடுமுரடாகவும், மென்மையாகவும், நல்லதாகவும் அல்லாததாகவும் பலவாக இருக்கிறது. பருமனாகவும், நடுத்தரச் சூட்சுமமாகவும், மிகச் சூட்சுமமாகவும் மூன்று உருவங்களில் இருக்கிறது. மனிதரில் சாத்விகம்; இராஜசம் தாமசம் என்ற முக்குணங்களைப் பார்க்கிறோம். உலகம் மூவகையாக இருப்பதால் நமக்கும் முக்குணங்கள் வேண்டியவாக இருக்கின்றன. மூன்றும் வேலை செய்தால்தான் உலகில் நன்றாக வாழலாம். ஒன்று குறைந்தாலும், அல்லது இரண்டு குறைந்தாலும் நல்வாழ்க்கையைப் பெற முடியாது.

மென்மையான குணம் சாத்விகம். அதிகார குணம் இராஜசம். மந்தமான குணம் தாமசம். தாமசம் வேண்டத் தகாதது அன்று. உலகத்தோடு ஒட்டிப் போவது தாமசம். விதைத்தால் விதை முளைக்கிறது. விதைக்காவிடில் முளைக்குமா? ஆகவே ஒன்றின் வழி ஒட்டி நடந்தால்தான் அதன் விளைவைக் காண முடியும். ஒட்டிப் போனால்தான் எதையும் வசப்படுத்த முடியும். வசப்படுத்தி, வெற்றி கண்டு, காத்துக்கொள்வது இராஜசம். இயற்கைப் போக்கில் போய் ஒன்றைக் காத்துக்கொள்ளுதலே ஆட்சிமுறை. காத்துக் கொண்டதை உலகுக்குப் பயன்படுத்துவது சாத்விகம்.

விலங்கு குணம் தாமசம். மனிதகுணம் இராஜசம். தேவகுணம் சாத்துவிகம். உலகத்தோடு ஒட்டிப் போதலாகிய பருப்பொருள் தன்மை தாமசம்; சாதாரண உலக போகங்கள், சாப்பிடுதல், நீர் குடித்தல் முதலியவைகளில் மட்டும் நினைவு இருப்பது சாதாரண மனித நிலை. இதற்கு மேலாக உள்ள ஆட்சி செய்கிற நிலை மனிதரில் மனிதராக உள்ள நிலை. இது இராஜசம்; உலகுக்குப் பயன்படுத்தும் தேவராக இருப்பது சாத்துவிகம். அதிகப்படியாக அன்பு செலுத்துவது மனிதரில் தெய்வப் பண்பு பெற்ற நிலை; வெறும் நினைவு மிருக குணத்துக்கும், அறிவு மனிதருக்கும், அன்பு தெய்வப் பண்புக்கும் பொருந்தும்.

மூன்று குணங்களால் ஆட்சி நடத்த மூவகைப் பாவனை வேண்டும். பாவிப்பதற்கு வடிவமும் வேண்டும். இதற்கு எந்தப் பெயரையாவது கொடுத்துக் கொள்ளலாம். பெயரைப் பற்றிக் கவலை இல்லாமல் இப்போது உண்மையைப் பார்ப்போம்.

உலகில் ஒருசக்தி இருக்கிறது. அது மூவகையாகப் பாவியிருக்கிறது. மிருக சக்தி, மனிதசக்தி, தேவ சக்தியாக இருக்கிறது. நாம் மிருக நிலையிலிருந்து, மனித நிலைக்கு வந்து, கனிந்த இனிமை நிலைக்கு உயர்கிறோம். இயற்கையை அப்படியே எண்ணிப் பார்க்க மூன்று வடிவமாக இருக்கும் பாவனை நம்மிடத்தில் உண்டாகும். இதைப் பொது மக்களா

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

லும் எண்ணிப் பார்க்க முடியும் உயர்கிற நிலையில் இருப்பவர் உணர்வுக்குத் தக்கபடி வேறு வடிவங்களைப் பெறுவர். இவ் வடிவங்களுக்கு வேறு வேறு மூர்த்திகள் உண்டு அவைகளைப் பற்றி நாம் இப்போது கவனிக்கும் நிலையில் இல்லை. ஆரம்பமாகப் பொதுமக்களால் அறியக் கூடியதாக இருப்பதை ஒரு பெயராகச் சொல்ல வேண்டுமானால் விநாயகர் என்று கூறலாம்.

விநாயகருக்கு யானை முகம், மனிதர்க்கு உள்ள இருகால்கள், தேவர்களுக்கெனக் குறிப்பிடும் நான்கு கைகள் முதலியன உண்டு. இம் மூன்றின் வாயிலாக விளங்கிக்கொண்டிருக்கும் ஒரு சக்தியே இயற்கைச் சக்தி; இது ஆரம்ப சக்தி; எடுத்தவுடனே மூவகை அமைப்புகளே முதலில் தோன்றுகின்றன.

தெய்வம் எப்படி இருக்கிறது என்பதற்கு வடிவம் கற்பிக்க வேண்டும். இதற்கு விநாயகர் என முன்னோர் அமைத்துக் கொண்டனர். விநாயகர் காட்டுகிற முறையில் செல்லுவதற்கு மனத்தாலும், அறிவாலும், அன்பாலும் காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. மிருக நிலையிலிருந்து மனித நிலைக்கு வந்து உயர்வது நாகரிகமுறை. இது நாகரிக வளர்ச்சியைக் காட்டுகிறது. நினைப்பையும், அறிவையும், அன்பையும் முடிந்தவரை பிடித்துக்கொள்கிற மாதிரி பிள்ளையாரை அமைத்திருக்கிறார்கள். சுலபமாகப் பாவிப்பதற்கும் எட்டுகிற மாதிரி இருக்கிறது.

நல்லவர் நல்லதையே நாடிக் கொண்டிருப்பர். நாமும் நல்ல வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொண்டு இனிமைத் தன்மையில் எவ்வளவு வளர்ச்சி பெறுகிறோமோ அதற்கேற்ப விநாயகரும் நம்மிடத்தில் விளங்குவார். வேறு முறைகளில் சென்றால் விளங்கமாட்டார். வளர்ச்சிக்கு ஏற்ற ஆற்றல் பெறுவோம்.

இயற்கை, மூன்றிலும் ஊடுருவி இருக்கப் பார்க்கிறோம். பருமைத்தன்மை, அறிவுத் தன்மை, உணர்வுத்தன்மை என்னும் நினைவு, அறிவு, அன்பு மூன்றிலும் கலந்து இருக்கும் தெய்வத்தை ஒன்றை விட்டு விட்டு அல்லது இரண்டை விட்டு எப்படிப் பார்ப்பது? மூன்றிலும் கலந்து மூவகையாகத் தோற்றம் அளிப்பது நல்ல தெய்வம். இதை நினைத்து அறிந்து, உணர்வு கொள்ளப் பாவனை வளரும். இம் மூன்றையும் நினைந்த ஒரு தொகுப்பு ஓம் என்று கூறப்பட்டிருக்கிறது. பலர் கூச்சவிட 'ஓ'எனப்பொதுவாகக் கேட்கிறது. உண்மையில் எவரும் ஓ என்று கூறவில்லை. அண்மையிலன்றித் தூரத்தில் இருப்பவர்க்கும்'ஓ'எனக் கேட்கிறது ஆகவே ஓம் என்பது இயற்கை.

பொருள் உலகை விட்டு ஒலி உலகில் நினைவு, அறிவு, அன்பு மூன்றையும் சேர்த்துப் பார்க்க ஓம் என்பது தெரிகிறது. இவ்வுண்மையில் எவருக்கும் மாறுபாடு இல்லை. கத்தரிக்காய் என ஒலித்தால் ஒலி தெரிகிறது. பொருள் ஞாபகமும் வருகிறது. கடைக்குப் போய்க் கத்தரிக்காய் வேண்டும் எனக் கேட்டு வாங்க வேண்டியிருக்கிறது. பெயரைச் சொல்லாவிட்டால் கடைக்காரர் எதை எடுத்துக் கொடுப்பார்? பெயரைச் சொல்லாமலே நாமாக எடுத்துக் கொள்வது கொள்ளையில் சேரும். இப்போது பொருள் உலகைப் பார்த்தது போல ஒலி உலகிலும் பார்ப்போம்.

ஒலியில் ஓம் என்கிறோம். ஒலிக்கு உரிய பொருளாகிய விநாயகரை நினைக்கிறோம். ஒரு பொருளை அடைய ஒலி தேவை என்று பார்த்தோம். ஒலியைக் கொடுக்காமல் நாமாகப் பொருளை எடுத்துக் கொள்வது கொள்ளையாதலின் ஓம் சொல்லி விநாயகரை நினைக்க வேண்டும். ஒலியைக் கொடுத்து இன்னது தேவை என்று கூற, தேவைப் பொருள் கிட்டுகிறது.

ஆகவே ஓம் சொல்லி விநாயகரை வழிபட்டால் மொத்த சக்தி நம்மிடத்தில் வந்து சேரும். ஒலியிருந்தால்தான் பொருளை அடையலாமாதலின் மொத்த ஒலியைக் கொடுத்து மொத்த சக்தி தரும் விநாயகரை அடைவோம். (வரும்)

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
௬௩ கிடங்குதெரு சென்னை 1.

கலைத் துறை

திருக்குறள்-வாழ்க்கை மறை

(மெய்கண்டான்)

"திருவள்ளுவருக்குக் கோவில் இருக்கிறது என்பதனை இந்த விழாவால் இதனை நடத்துவோர் நன்கு விளக்கிவிட்டனர். கபாலீச்சுரத்தைவிட இதனைப் பெரிதாக மதிப்பேன். ஏனெனில் இறை ஆற்றல் பெரியோர் வாயிலாகத்தான் நன்கு தெரியும். இதைப்போலவே திருஒற்றியூரில் பட்டினத்தார் கோவிலை அங்குள்ள ஆண்டவன் கோவிலை விடப் பெரிதாக மதிப்பேன். இவ்விருவரால் சென்னைத் தலைநகரம் சிறப்புப் பெறுகின்றது.

திருவள்ளுவர் கோவிலை விடத் திருக்குறளை அவர் ஆலயமாக மதிப்பேன். திருவள்ளுவர் கோவிலில் நுழைவது திருக்குறளில் நுழைவதற்கேயாகும்.

நம் வாழ்க்கையின் நலம் திருக்குறளில் உண்டு. வாழ்க்கை முழுவதையும் அது காட்டுகிறது. இனித் திருக்குறளில் கூறப்பட்டதை விட வேறு வளர்ச்சியே இல்லையோ எனின், உண்டு. ஆனால் அவற்றை எல்லாம் குறளிலேயே அடக்கிக் காட்டலாம் என்னும் கருத்துப் பலர்க்குண்டு.

திருக்குறள், வாழ்க்கை மறை. மற்ற வேதங்களும் வாழ்க்கை மறையாக இருந்தாலும், வாழ்க்கையின் உண்மைகளைப் பல பிரிவுகளாக வைத்து, தொகுத்துத் தெளிவுபடுத்தி இருப்பதில் இது தலை சிறந்தது. இவ்வாறு தெளிவு படுத்தியவர்களுள் திருவள்ளுவரைப் போன்றவர் அவருக்கு முன்னும் பின்னும் இல்லை. அவர் காலத்தில் இருந்தவர் அனைவரும் அவர் நூலுக்குத் தலை பணிந்ததிலிருந்தும், அவ்வாறே அவருக்குப் பிற்பட்டவர் அனைவரும் தலைபணிந்திருப்பதனாலும், இதைப் போன்ற வேறு ஒரு நூல், இங்கும், எங்கும் இல்லாததனாலும், அவரை ஒரு ஒப்பற்ற எல்லையில் இருப்பவர் என்று கூறலாம். எனவே அவர் வாழ்க்கையைப் பற்றிக் கூறும் தகுதியுடையவர்.

வாழ்க்கையைப் பற்றி அவர் தெரிவித்ததைத் திருக்குறள் பாயிரத்தில் காணலாம். முப்பாலும் பாயிரத்தில் அடங்கும். பாயிரம் மிக முதன்மையானது. அது நான்கு அதிகாரங்களைக் கொண்டது. அதைக் கேட்டு அறிந்துகொண்டால் போதும். அது விதை போன்றது. மற்றது மரம் போன்றது. மரம் முழுவதும் விதையில் உண்டு.

பாயிரத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒரு குறளை விளக்கித் திருக்குறள் எவ்வாறு வாழ்க்கை நூலாக இருக்கிறது என்பதைக் காட்டுவேன்.

முதல் அதிகாரம் கடவுள் வாழ்த்து. கடவுள் வாழ்த்து நம் வாழ்க்கைக்குத் தேவையானதா? கடவுள் என்றால் தனக்குச் சமமாக ஒன்றை இல்லாதது என்பது விளங்கும். சிலர் தவத்தால் உயர்ந்து விட்டதனால் அவரே கடவுள் என்று எண்ணுகிற கோட்பாடு உண்டு. அப்படிப் பார்த்தால் எத்தனையோ ஆன்மாக்கள் அவ்வாறு உயர்ந்துள்ளன. ஆனாலும் இறைவன் தன் னிகரில்லாதவன். அவன் தாளைச் சேர்ந்தாலன்றிக் கவலையைத் தீர்க்க முடியாது என்று திருவள்ளுவர் கூறுகிறார். "தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க் கல்லால் மனக்கவலை மாற்ற லரிது" என்பது திருக்குறள். நம் கவலைகளைப் போக்கிக் கொள்ளவேண்டுமானால் கடவுள் வாழ்த்துத் தேவையாகின்றன. எனவே, திருக்குறள், வாழ்க்கையோடு தொடர்புடைய நூல்.

இனி, 'வான் சிறப்' பென்னும் அதிகாரத்தில், மக்கள் இன்ன நெறியில் நடந்தால் மழை பெய்யும் என்று சொல்லவில்லை. 'மழை இன்ன தன்மையுடையது, அது இல்லாவிட்டால் என்ன நேரும்?' என்பதைச் சொல்லுகிறார். பத்துக் குறளிலும் மழை பெய்வதற்காக இன்னது செய்க என்று சொல்லவில்லை. சென்ற ஆறு ஆண்டுகளாக இங்கு மழை இல்லாமற் போய்விட்டது. இதனால் மக்களுக்கும் மழைக்கும் தொடர்பில்லை என்று பொருளல்ல. அது மனிதனால் வருவதன்று. விஞ்ஞானத்தாலோ வேறு எதனாலோ நடப்பதுமன்று. எங்காவது நடைபெற்றால் அது விளையாட்டாகவே இருக்கும். இறைவனே கனிந்து மழையாகப் பெய்ய வேண்டும்.

மக்களுடைய நடவடிக்கைக்குக் கனிந்து அது தானே பெய்யவேண்டும். தனக்குவமை இல்லாதான் தாளைச் சேர்வதனால் அது பெய்யும். மழை பெய்ய வேண்டுமென்பதற்குத் "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்னுங் குறள் இருக்கிறதே எனலாம். ஆனால் கேட்டுப் பெறுவது சிறந்ததன்று. நம் நடவடிக்கைக்கு இறைவனே தரவேண்டும். கேட்பதென்பது பிச்சை எடுத்தலாகும். அதனாற்றான் பிரார்த்தனை கூடாதென்பது. கொழுநனை மட்டும் தொழுபவளுக்குப் பெய் என்று சொல்லிப் பெய்விக்கும் ஆற்றல் உண்டு. தெய்வத்தையும் தொழுது கொழுநனையும் தொழுதால் மழை தானே பெய்யும்.

திருக்குறளில் ஐய மேற்பட்டால் ஒளவையாரிடம் அதனைத் தீர்த்துக் கொள்ளலாம். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு மழை பெய்யும் என்று சொல்லுகிறார் ஒளவையார். நல்லவர் ஒருவர் இருந்தால் நல்லுணர்ச்சி பெருகும். அதனால் மழை தானே பெய்யும்.

பெரியோரிடம் எதையும் கேட்கக் கூடாது. அவர்களுக்குத் தொண்டுதான் செய்யவேண்டும். இறைவனிடம் அவ்வாறே எதையும் கேட்கக்கூடாது. "மண்மேல் யாக்கை விடுமாறும், வந்துன் கழற்கே புகுமாறும் அண்ணா எண்ணக் கடவேனோ!" என்று மாணிக்க வாசகரும் கூறினார். பிறவியை மாய்க்க வேண்டுமென்று எண்ணுவது பெரிதுதான். ஆனால் அதையும் கேட்கக் கூடாது. இவ்வளவு உயர்ந்ததையே கேட்கக் கூடாதென்றால், மழையைக் கேட்பது தவறு தானே? நம்மைக் கண்டு அது தானே பெய்யவேண்டும். எனவே ஆண்டவனை வேண்டு, இப்படி இரு என்று சொல்லாமல், மழை இயல்பாகப் பெய்வது என்றும், ஆற்றலுடையது என்றும் இவ்வதிகாரத்தில் தெரிவித்தார்.

மக்களின் நல்வாழ்வுக்குப் பலர் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்த முயல்கிறார்கள். ஆனால் பொருளாதாரம் மழையின்றிச் சிறப்புறாது. மழை அருளின்றி இல்லை. அருளுக்கு நல்லுணர்ச்சி பெருகவேண்டும். எனவே செய்ய வேண்டிய வேலை நல்லுணர்ச்சிப் பெருக்கத்திலேயே உள்ளது. இதை விட்டு விட்டு வேறு எங்கோ முயல்வது நற்பயனைத் தராது.

இனி, நீத்தல் என்பது, திருவள்ளுவர் கருத்துப்படி, பிறர்க்கென் வாழ்கிற காலத்தில் தன்னலம் தானே அற்றுப்போகும் நிலை. நாமாக எதையும் நீக்குவதல்ல. "அந்தணரென்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மை பூண்டொழுகலான்" பிறர்க்காக நாம் உயிரை வைத்துக் கொண்டால் நாம் அந்தணர். இல்லாவிட்டால் நாம் பயன் இல்லை. கோவிலுக்குச் செல்லுவது, கடவுளை வணங்குவது மட்டும் நீத்தார் நிலையாகிவிடாது. அது பிறர்க்கு வாழும் நிலையாகும். அந்த நிலை தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்து அவன் எண்ணப்படி நடப்பதாகும். அவன் எண்ணம், எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகுவது; உயிர்கள் உயர வேண்டும் என்பது.

திருக்குறளில் கருத்து முடிவைக் காணலாம். சங்க கால நூல்களே நல்ல முடிவுகளைத் தருவன. அவை அருள் நூல்கள். சங்ககால ஆசிரியர்கள் அனைவரும் மகரிஷிகள்; பெரியோர்; சான்றோர்; அந்தணர். சங்க நூல்களிடம் வந்தால்தான் ஐயம் தீரும். அவற்றுள் இந்த ஒரு நூல் போதும். இதன்படி கடவுளைச் சார்வது எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூணுவது. கடவுளைச் சார்வதற்குள்ள சடங்குகளையும், இக் கருத்தையு பார்த்தால் வேறு போலத் தோன்றுப. ஆனால் அச் சடங்கு நூல்கள் இம் முடிபிற்கே கொண்டு செல்லும்.

பிறர்க்காக வாழ்ந்து வர, பற்று விட்டுக்கொண்டே வரும். அது கடவுளைச் சாரும் அடையாளம்.

பிறர்க்காக வாழ்ந்து தொண்டு செய்ய வேண்டுமானால் இருமை வகை தெரிந்து கொள்ள வேண்டும். "இருமை வகை தெரிந்து ஈண்டறம் பூண்டார் பெருமை பிறங்கிற்றுலகு" இப்பொழுதுள்ள பிறவிநிலை, மேல் நிலை ஆகிய இரண்டையும் தெரிந்த பின்னரே இந்த உலகியல் தொண்டு செய்ய தகுதி உண்டாகும். இருமை என்றது இப்பிறவி நிலையையும், இதற்குப் பின் வரும் நிலையையும் குறிப்பதேயாகும். இவற்றின் கூறுபாடுகளை அறிந்தால் மட்டுமே இங்கு நன்கு தொண்டு செய்ய முடியும். இந்தியாவில் தொண்டு செய்வதற்கு இந்தியாவைப் பற்றிய அறிவு போதாது; மற்ற நாடுகளைப் பற்றிய அறிவும் வேண்டும் என்பது போலவே இதுவும் மறுமையைப் பற்றி அறியவில்லையானால் தொண்டு செய்யும் தகுதி இல்லாமற்போம். பிறர்காக வாழ முடியாது. ஊழ்நிலை தெரியாது.

(வரும்)

பதிப்பித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)